சுமார் ரூ. 62 இலட்சம் செலவில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே அரசினுடைய நிதிநிலை குறித்து இந்த ஆண்டு அதை செயல் திட்டத்திலே சேர்த்துக் கொள்வதற்கான முயற்சியை அரசு எடுக்கும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தை எடுத்துக்கொள்கிறபோது அதை ஒட்டினாற்போலுள்ள சித்தூர், வெள்ளிரிவள்ளி, ஆடையூர், இடுப்பாலை போன்ற ஊராட்சிகளும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 8338 மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப் பட்டுள்ளது.

கோழி நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையம்

*3367—திரு. ஏ. சுப்பு :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், இராசிபுரத்தில் கோழி நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாட்டம் ராசிபுரம் வட்டாரத்தில் பொதுமக்கள் கோழிப் பண்ணைகளை வைத்து குடிசைத் தொழிலாக நடத்திக் கொண்டு பயனடைந்து வருகிறார்கள். சில நேரங்களில் திடீரென்று கோழிகளுக்கு நோய் வந்து அவை

இறந்துவிடுகின்றன. அவைகளைத் தடுப்பதற்கு உடனடியாக ஒரு கோழி நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சேலம் மாவட்டம் நாமக்கல்லில் ஒரு கோழி நோய் ஆராய்ச்சி நிலையம் செயல் பட்டு வருகின்றது. ஒரு மையத்தைப் புதியதாக ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதிகமான செலவு ஏற்படும். நாமக்கல் லுக்கு அருகாமையிலேயே ராசிபுரம் இருக்கின்ற காரணத்தி னால் அந்த நாமக்கல்லில் இருக்கின்ற கோழி நோய் ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக அந்த பண்ணையாளர்கள் பயனடைய லாம் என தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலூரில் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகம்

*6547—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், மேலூரில் முன்பு இயங்கி வந்த கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் மீண்டும் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. வெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேலூர் தொகுதியில் சேத்திப்பட்டியிலே ஒரு தீவிர கால்நடை அபிவிருத்தி செயற்கை உறை கருவூட்டு விற்பனை நிலையம் கடந்த 20 ஆண்டுகளாக இருந்தது. இப்போது அது காலாவதியாகிவிட்டது! என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது என்பதை கவனத்திற்குக் கொண்டுவருவ தோடு, இதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை வினா தொடர்புடைய தாக இல்லாத காரணத்தினால் தனி வினா எழுப்ப வேண்டு கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS